யாழ்ப்பாணம்


# முரசொலி

பக்கங்கள் நான்கு | விலை ரூபா; 5-00

முரசு 06 ஒலி 209 ஆங்கீரச ஆனி 09 (23.06.1992) செவ்வாய்


## ராஜீவ் கொலை வழக்கில் மோதிலால்நேரு ஆஜராவார்?

இலங்கைத் தமிழ் வழக்கறிஞரான மோதிலால் நேரு ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்காக வாதாட சில நாட்களில் சென்னை செல்லலாம் எனத் தெரியவருகிறது. சென்னையிலுள்ள விசேட நீதிமன்றம் ஒன்றில் நடைபெறும் இவ்வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

# இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு நிதிப் பற்றாக் குறைவால் நிறுத்தம்

## இராணுவ வட்டாரங்கள் தரும் தகவல்

**கடுமையான நிதிப்பற்றாக்குறைகாரணமாக இராணுவத்திற்குப் புதிதாக ஆட்களைச் சேர்ப்பதை ஸ்ரீலங்கா அரசு இடைநிறுத்தியுள்ளது. இத்தகவலை சண்டே ஐலண்ட் பத்திரிகை இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிட்டுள்ளது,**

இராணுவத்தை விட்டு ஓடியவர்கள, இறந்தவர்கள் என ஏற்பட்ட ஆறாயிரம் வெற்றிடங்களை இராணுவம் இப்போது நிரப்பி முடித்துள்ளது நான்காயிரம் இராணுவ சிப்பாய்களுக்கு மேல் பதவியை விட்டு ஓடிவிட்டதாகவும் மேலும் அதிக எண்ணிக்கையினர் போரில் பலியாகிவிட்டனர் எனவும் இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை மேலும் செய்தி வெளியிட்டுள்ளது

04ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் ஆதரவு பெறாத தீர்வு வெற்றியளிக்காது-மோதிலால்

இனப்பிரச்சினையில் விடுதலைப் புலிகளைத் தவிர்த்த ஏனைய தமிழ் அரசியல் குழுக்கள் முக்கியமற்றவை எனத் தமிழ்க் காங்கிரஸ் பிரதித் தலைவர் மோதிலால் நேரு 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் ஆதரவு பெறாத எந்தத் தீர்வும் பயனற்ற முயற்சியெனவும் அவர் கூறியுள்ளார்.

முழுமையாக ஆராய்ந்து பார்த்தால் தீர்வுக்கு முயற்சி செய்யும் தமிழ்க் குழுக்கள் பிரச்சினை சார்புத் தொடர்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்க்குழுக்களின் பேச்சாளர் தெரிவில் முரண்பாடு இருந்தது

சென்றவாரம் ஜனாதிபதி பிரேமதாசாவை தமிழ்க் குழுக்கள் சந்தித்தபோது, அவர்கள் சார்பில் யார் பேச்சாளராக இருப்பது என்பதில் கருத்துவேற்றுமையிருந்ததாகத் தெரியவருகிறது.

தமிழ்க்குழுக்களின் சந்திப்புக்கள் கோரிக்கைகள் வரைவு என்பனவற்றில் தீவிரமாக ஈடுபட்ட திரு. குமார்பொன்னம்பலம் பொருத்தமும் தகுதியுமற்றவராக ஒருகுழு கருதியதால் தமிழர் கூட்டணியின் தங்கத்துரை பேச்சாளராகத் தெரிவுசெய்யப்பட்டாராம்.

இதற்கிடையில் சுதந்திரக் கட்சி தெரிவுக்குழுவுக்குத் திரும்புவதென தீர்மானமெடுத்தவுடனேயே குமார் பொன்னம்பலம் ஜனாதிபதியுடனான சந்திப்பு அவசியமற்றது எனக் கூறியதாகத் தெரிகிறது

தமது கட்சியின் சார்பில் பிரதிநிதிக்குழுவில் தாம் செல்லவிரும்பவில்லையெனத் தமது கட்சியினர்க்கு குமார்

... 04ஆம் பக்கம் பார்க்க

## ● வடக்கு-கிழக்கு இணைப்பு

## கருத்தொற்றுமை எனில் எதிர்க்க மாட்டோம் என்கிறார் ஜனாதிபதி

வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பாக தமது கருத்தை தமிழ்க்குழுக்களுக்கு சென்ற வாரம் தெரிவித்த போது சிறிது இடைவெளிவைத்தே ஜனாதிபதி பிரேமதாசா பேசியுள்ளார் எனத் தெரிகிறது "இணைப்புப்பற்றி நீங்கள் பிரஸ்தாபித்தீர்கள் ஐ.தே.க. தேர்தல் விஞ்ஞாபனம் அதற்கு எதிரானதெனக் கூறுகிறது ஆனால் இதில் ஒரு கருத்தொற்றுமை ஏற்படுமானால் நாம் அதை எதிர்க்க மாட்டோம் என்ற நிலையை நாம் இப்போது எடுத்துள்ளோம்" எனக் கூறியுள்ளார்

மேலும் "உங்களிடையே இன்னும் வேறுபாடுகள் உள்ளன சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் திருப்திப்படுத்தும் வகையில் விடயங்கள் ஏற்படுத்தப்பட்டால் இந்தப் பிரச்சினையை நாங்கள் தீர்க்கலாம்" என்றும் கூறியுள்ளார் ஆனால் இணைப்பு சிங்கள

— 4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். வைத்தியசாலைக் குழு ஏமாற்றத்துடன் திரும்பியது

தமிழ்ப்பிரதேசங்களில் இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னரே யாழ் வைத்தியசாலைக்கு ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைகளும் குறைபாடுகளும் தீர்த்து வைக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது

யாழ் ஆஸ்பத்திரி நிலைகுறித்து சுகாதார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்த சென்ற யாழ் வைத்திய குழுவிடமே அதிகாரிகள் இப்படித் தெரிவித்தனராம்

ஆஸ்பத்திரி ஊழியர்களின் 1990 ஆம் ஆண்டு கஷ்டநிவாரணப்படி குறித்துப்பேச்சு நடத்திய போது சிவில் நிர்வாகம் ஏற்பட்ட பின்பே அதை வழங்கமுடியும் என பதில் கிடைத்ததாம்

தாம் கொழும்பிலிருந்து முழு ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளதாக யாழ் ஆஸ்பத்திரி வைத்திய குழு எமது செய்தியாளரிடம் தெரிவித்தது. 07

## ★ தொண்டமான் சொல்கிறார்

## கோரிக்கைகள் நியாயமானவை அவற்றை ஆதரிக்கின்றேன்

கடந்தவாரம் தமிழ்க்குழுக்கள் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் சமர்ப்பித்த நான்கு அம்சத் திட்டத்தின் வரைவில் அமைச்சர் தொண்டமானுக்கும் பங்குண்டு

அமைச்சர் தொண்டமான் தமிழ்க் குழுக்களுடன் இணைந்து செயற்படுவது அரச வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதனால் உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் அமைச்சர் தொண்டமானுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டார் எதையும் நேராகவே பேசும், திரு தொண்டமான் "கோரிக்கைகள் நியாயமானவையென நான் கருதுகிறேன். தமிழ்க்கட்சிகள் வரைந்தவை நான் அவற்றை ஆதரிக்கிறேன்" என்றாராம்.

## கே. ஜி. பி. நிதி உதவி சுதந்திரக்கட்சி ஆராயும்

முன்னாள் சோவியத் யூனியனின் உளவுத்துறை அமைப்பான கே.ஜி.பி சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி உதவி வழங்கியதாக கூறப்பட்ட குற்றச்சாட்டை சுதந்திரக்கட்சி விசாரிக்கும் என அக்கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக தெரிவித்தார்

தமக்குத் தெரிந்தவரை சுதந்திரக்கட்சியினர் எவரும் இவ்வாறு நிதி உதவி பெறவில்லையெனக் கூறிய அவர் சில பத்திரிகைகள் சுதந்திரக்கட்சியை மட்டுமே தனிமைப்படுத்திக் குற்றஞ்சாட்டுவதாகவும் அந்தச் செயற்குழுக் கூட்டத்தில் எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தொடர்பு நடவடிக்கைகள் பற்றி ஆராயப்படும் என்றார்

'இந்து பத்திரிகை வெளியிட்ட அச்செய்தியில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவைத் தவிர வேறு எவரது பெயரும் குறிப்பிடப்படாமை கவனிக்கப்பட வேண்டியது

## 1988 இல இருந்து விசாரணை அன்னையர்முன்னணிகோரிக்கை

அரசியல் காரணங்களுக்கான கொலைகள் மற்றும் காணாமல் போனோர் சம்பந்தமாக 1988 இலிருந்து விசாரணை நடத்தப்பட வேண்டுமென அன்னையர் முன்னணி கோருவதாக எதிர்க்கட்சி எம். பி. மங்கள சமரவீர தெரிவித்தார்.

1991 ஜனவரி பதினோராம் திகதிக்கு முன்னர் நடைபெற்ற கொலைகள், காணாமல் போதல் தொடர்பாக விசாரணை நடத்தாமல் 88 இலிருந்தே விசாரணை நடத்த ஜனாதிபதி ஒரு ஆணைக்குழுவை நியமித்திருக்கவேண்டுமெனவும் சமரவீர தெரிவித்தார்

"ஜே. வி. பியை அடக்குவதென்ற போர்வையில் பல்லாயிரக்கணக்கான கொலைகளைச் செய்ய பாதுகாப்புப் படைகளுக்கு அரசாங்கமே உத்தரவிட்டது என அன்னையர் முன்னணி குற்றஞ்சாட்டுகிறது.

"கொலைக்குழுக்களால் பெருமளவிலான கொலைகளும் காணாமல் போதலும் 1988,1989 களிலேயே நடந்தன" என மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

## அவ்ரோவுக்கு அஞ்சி ஓடிய சிறுவன் பஸ் மோதி காயம்

மல்லாகம், சுன்னாகம் பகுதியை நேற்று பிற்பகல் 4மணியளவில் அவ்ரோ விமானம் தாழப்பதிந்து வட்டமிட்டு அப்பகுதிமக்களை அச்சுறுத்தி விட்டுச் சென்றுள்ளது

அச்சமயத்தில் அப்பகுதிகளில் நின்றிருந்த மக்கள் பாதுகாப்புத்தேடி ஓடினர் வீதியால் வந்தவர்கள் ஒதுக்குப்புறம் தேடிஓடின

மினி வண்டி ஒன்றுமீதே அவ்ரோ விமானம் குறிபார்த்து தாழப்பறந்ததையடுத்து சாரதி வேகமாக ஓட்டிக்கொண்டு வருகையில் மல்லாகம் கட்டையடியில் பாதுகாப்புத் தேடி ஓடிய சிறுவனை மோதியது படுகாயங்களுக்குள்ளான சிறுவன் சுயநினைவற்ற நிலையில் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

அவ்ரோ விமானம் மக்களை பீதி கொள்ள வைத்ததையடுத்து சுன்னாகம் மல்லாகம் பகுதி வர்த்தக நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டன 07

# அனுமதிப்பத்திரம் இல்லாமல் வவுனியாவில் நடமாடத் தடை!

வவுனியா நகரப் பகுதியில் பாதுகாப்புப் படையினரின் அனுமதிப் பத்திரமின்றி நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் நடமாடுவோர் பாதுகாப்புப் படையினரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தைக் கட்டாயம் தம்முடன் எடுத்துச் செல்லவேண்டுமெனவும், அனுமதிப்பத்திரமின்றி நடமாடுவோர் கைது செய்யப்படுவர் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் வசிப்போருக்கு நிரந்தர, தற்காலிக குடியிருப்பு அட்டைகள் என இரு வகையான அனுமதிப் பத்திரங்கள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

கொழும்பிலிருந்து வவுனியா வந்து, வவுனியாவில் ஒரு நாள் தங்கவேண்டியேற்பட்டால் அவர்கள் வவுனியா புகையிரத நிலையத்தில் படையினரிடம் ஒருநாள் தங்குவதற்கான அனுமதி அட்டையைப் பெற்றுத் தங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட நாள்கள் தங்கவேண்டியேற்பட்டால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒரு கிழமை தங்குவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

# மட்டு. விண்ணப்பதாரிகளுக்கு கொழும்பில் நேர்முகப்பரீட்சை!

மட்டக்களப்பு விபுலாநந்தர் இசை நடனக் கல்லூரி ஆசிரிய பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஜூலை 3 ஆம் திகதி கொழும்பு இந்துசமயக் கலாசார அமைச்சு அலுவலகத்தில் இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

# லண்டன் வங்கியில் இலங்கையர் பண மோசடி!

லண்டனில் உள்ள வங்கியொன்றில் இலங்கையர் ஒருவர் காசோலை மோசடி செய்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர் இவ்வங்கிக்குரிய காசோலையில் போலி ஒப்பத்தையிட்டுப் பெருமளவு பணத்தை மோசடி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நபரைத்தேடி லண்டன் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸார் கொழும்பு வந்துள்ளனர்.

# நெற் செய்கைக் கடன் இருமடங்காக அதிகரிப்பு!

நெற் செய்கையாளர்களுக்கு வழங்கப்படும் விவசாயக்கடன் இரண்டு மடங்காக அதிகரிக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் 73 கோடி 40 இலட்சம் ரூபா நெற்செய்கைக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் மக்களின் மனித உரிமைக் கமிஷன்

இந்திய மக்களின் மனித உரிமைக் கமிஷன் என்ற ஒரு அமைப்பு இந்தியாவில் 1987 ஜனவரி பத்தாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆசியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட மக்கள் கமிஷன் இதுவாகும்.

இந்தியாவின் மனித உரிமை இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் முன்னாள் நீதிபதி வி.எம். தாrகுண்டே போன்றவர் இக்கமிஷனில் அங்கம் வகிக்கின்றனர்.

இந்திய மக்களின் மனித உரிமை நடுவர் மன்றம் என்ற ஓர் அமைப்பை இந்தக் கமிஷனை உருவாக்கியுள்ளது.

இந்த நடுவர் மன்றத்தில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதிகள், முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதிகள் மட்டுமே அங்கம் வகிக்கின்றனர்.

இந்த நடுவர் மன்றத்தின் தலைவராக முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி வி. ஆர். கிருஷ்ண ஐயர் பணிபுரிகிறார்.

பெரிய அளவிலோ திட்டமிட்ட முறையிலோ அல்லது குறிப்பிடத்தக்க வகையிலோ மனித உரிமைகளை அரசு மீறும் சம்பவங்களை விசாரிப்பதற்கான ஏற்பாடுகளை கமிஷன் செய்கிறது.

நடுவர் மன்றம் விசாரணை நடத்தி சாட்சியங்களை பரிசீலித்து தீர்ப்பு வழங்கும். இவை பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்றன.

# நாகபட்டினம் கடற்கரையில் 4 வடபகுதி மீனவர்கள் கைது!

தமிழகம் நாகபட்டினம் கடற்கரையில் கடந்த சனிக்கிழமை வடபகுதியைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப் படுகிறது.

இவர்கள் எரிபொருள் வாங்கிச் செல்ல தமிழகம் வந்திருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

# தேவ கோபத்துக்கு இலங்கைஉள்ளாகியுள்ளதா?

இலங்கை நாடு தேவ கோபத்துக்கு உள்ளாகியுள்ளதா?

இவ்வாறு சபையில் அச்சம் தெரிவித்தார் முன்னாள் அமைச்சர் கே. பி. இரத்நாயக்கா.

"இந்தப் பாராளுமன்றத்துக்கு வெள்ளம் வரும் என யார் நினைத்திருந்தார்கள். ஆனால் வெள்ளம் வந்தே விட்டது இலங்கை தேவ கோபத்துக்கு இப்போது உள்ளாகியுள்ளதா? இம் மாதம் 26 ஆம் திகதி நாட்டுக்கு ஒரு மோசமான நாள் எனக் கூறப்படுகிறது. இந்த நாட்டுக்கு ஏதோ தீமைநடக்கப்போகிறது இந்த கூற்று குறித்து சிரத்தை கவனம் செலுத்த வேண்டும்" எனவும் அவர் அங்கு கூறினார்.

பதிலமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்க சபையில் உரையாற்றுகையில் 'கடவுளின் செயலே இந்த வெள்ளம்' என்று கூறினார்.

பாராளுமன்ற சுற்றாடல்

# கால் நடை வளர்ப்பு

நல்லினக் கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்குமுகமாகச் செயற்கை முறைச் சினைப்படுத்தல் மூலம் இனவிருத்தி செய்யப்பட்ட நல்லினக் கால் நடைகளைப் பெற்றுக், கால் நடை வளர்ப்போருக்கு கூட்டுறவுச் சங்கங்களூடாக வழங்குவதற்கெனத் திட்டம் ஒன்றினை யாழ். மாவட்டத் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 6-18 மாதங்களுடைய நாம்பன் மாடுகள் வாங்கப்பட்டுச், சிறந்த பராமரிப்பின் கீழ் வளர்க்கப்பட்டு அவை மீளக் கால் நடை வளர்ப்பவர்களுக்கு விற்பனை செய்யப் படவுள்ளன.

# இராஜலக்சுமி மரணமானார்

பிரபல கர்நாடக இசைக் கலைஞர் திருமதி சூலமங்கலம் இராஜலக்சுமி (54) கடந்த ஞாயிறு சென்னையில் காலமானார்.

பக்திப் பாடல்கள் பாடுவதில் சிறந்து விளங்கிய சூலமங்கலம் சகோதரிகளில் ஒருவரான இவர் தமிழக அரசின் 'கலைமாமணி' விருது உட்பட பல பட்டங்களைப் பெற்றவர் சில தமிழ்ப் படங்களுக்கும் இவர் பின்னணி பாடியுள்ளார்.

# மெய்வல்லுநர் போட்டி

உரும்பராய் றோ. க. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது

அதிபர் கா. இராசகோபாலு தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது. (35)

# அரசுடனான பேச்சுக்களை மண்டேலா கைவிட்டார்!

தென்னாபிரிக்காவில் சுமார் நாற்பது கறுப்பின மக்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதனால் ஆத்திரமடைந்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா அரசுடன் எதிர்கால அரசியலமைப்புப்பற்றி பேசவிருந்த பேச்சுவார்த்தைகளை இரத்துச் செய்துள்ளார்.

பல கட்சி முறையிலான ஜனநாயக முறையினை ஏற்படுத்துவதற்கென நடத்தப்படும் இப் பேச்சுக்களில் தொடர்ந்தும் பங்குபற்றுவதா இல்லையா என ஆ. தே. காங்கிரஸ் விரைவில் முடிவெடுக்கவுள்ளது.

# கதிர்காமம் விகாரையில் 20 இலட்சம் ரூபா பண மோசடி!

கதிர்காமம் ஆலயத்தின் முன்னாள் பஸநாயக்க நிலமே ஒருவர் மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கதிர்காமம் விகாரைக்குச் சேரவேண்டிய 20 இலட்சம் ரூபாவை மோசடி செய்ததாக இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது

இவர் முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் எனவும் தெரிவிக்கப்பட்டது

# மத போதனைக்கென விசேட ஆசிரியர் நியமனமாவர்

நாட்டின் எல்லாப் பாடசாலைகளிலும் மத போதனை செய்யவும் ஒழுக்க நெறி போதிக்கவும் விசேட ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களை எவ்வாறு தெரிவு செய்வது என்பது பற்றி அரசு விரைவில் அறிவிக்குமெனவும் தெரிவிக்கப் பட்டது

# மாத்தளை நகரில் மாலை நேரச் சோதனை நிறுத்தம்!

மாத்தளை நகரில் மாலை 6 மணிக்குப்பின்னர் படையினர் வீடுகளைச் சோதனையிடுவது நிறுத்தப்பட்டுள்ளது

படையினர் எனத் தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு சிலர் இப்பகுதி வீடுகளில் மாலை நேரங்களில் கொள்ளை முயற்சிகளில் ஈடுபட்டதையடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

ஆகையால் யாராவது மாலை நேரங்களில் வீடுகளைச் சோதனையிடப் போகிறோம் என வந்தால் கதவுகளைத் திறக்கவேண்டாமெனவும் அவர்களை மடக்கிப் பிடித்து ஒப்படைக்குமாறும் மாத்தளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்,

# தமிழர்களுக்கு காணி

இரத்தினபுரிப் பகுதியில் காணியற்ற மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி பெற்றுக் கொடுக்கத் தான் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.


## 2-வது ஆண்டு நினைவலைகள்



2 ஆவது லெப் (றேனோ)

**விநாயகமூர்த்தி திபாகரன்**

(மறவன்புலோ)

| மண்மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 21-12-1973 | 23-06-1990 |

விண்ணுலகில் வீற்றிருக்கும்
மண்ணுலக மறவனே! உன்னை
மறைந்து விட்டாய் என்று
நாம் மறந்து விடவில்லை
நீ மறைந்து போகவில்லை......
எங்கும் செறிந்து வாழ்கிறாய்,

23. 6. 90 அன்று பலாலியில் இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்தார்.

மறவன்புலோ (றேனோவீதி) சாவகச்சேரி — குடும்பத்தினர்

06048

## சிறுவிளம்பரம்

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சினை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும், அதிர்ஷ்டம் அழைக்கிறது சாதகத்துடன் நேரில் வரவும் பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம் ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர் ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம் 96, கோவில் வீதி, (ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர்

06049

யாழ்ப்பாணம்



## மன்னார் அகதி முகாம்களுக்கு எதிரணிக் குழுவினர் விஜயம்!

மன்னாருக்கு விஜயம் செய்துள்ள எதிர்க்கட்சிக் குழு பிரதிநிதிகள் அங்குள்ள ஐந்து அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைமன்னார், பேசாலை, எருக்கலம்பிட்டி, புதுக்குடியிருப்பு, தாராபுரம் ஆகிய முகாம்களுக்கே இவர்கள் விஜயம் செய்தனர்.

இந்த முகாம்களில் இவற்றில் இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் தலைமன்னாருக்குத் திரும்பியோர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

## 'முஸ்லிம்களின் ஆணையுடனேயே தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு!'

முஸ்லிம் மக்கள் தந்த ஆணைப் பிரகாரமே நாம் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

"3 இலட்சம் முஸ்லிம் மக்களின் ஆணையைப் பெற்றவர்கள் நாங்கள் தனித்துவமான அந்த ஆணையை முன்வைத்தே நாங்கள் தமிழ்க் கட்சிகளுடன் பேசுகின்றோம். வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவம், பாதுகாப்பு, அடிப்படைப் பிரதேசம் என்ற மூன்று அடிப்படையிலேயே இந்தப் பேச்சுக்கள் இடம்பெறுகின்றன" எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இந்தியா மீது சி.ஐ.ஏ. கண்காணிப்பு

இந்தியா, பாகிஸ்தான், ஈரான், லிபியா, வடகொரியா ஆகிய நாடுகளின் அணுசக்தி ஆயுதத் திட்டங்களைக் கண்காணிக்குமாறு அமெரிக்க உளவுத் தாபனமான சி.ஐ.ஏ.க்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் இரகசிய பணிப்பு வழங்கியுள்ளார் என வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பாப்ரா கர்மால் விமான விபத்தில் பலி!

முன்னாள் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி பப்ராக் கர்மால் நேற்றுமுன்தினம் காபூலில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் கொலையுண்டார்.

விபத்தில் சிக்கிய விமானத்தில் பயணம் செய்த மற்றனைத்து பயணிகளும் கொல்லப்பட்டனர். விபத்துக்கான விவரங்கள் இன்னும் வெளிவரவில்லை.

## மலைநாட்டில் தொண்டமான் தமிழ் ராஜ்யம் உருவாக்குகிறார்

### சு. க. எம். பி. திலக் கருணாரட்ணா

"இந்த நாட்டில் ஒரேயொரு சக்தி வாய்ந்த மனிதன் தொண்டமான் மட்டுமே. தோட்டத் தொழிலாளர்கள் இப்போது 54000 ஏக்கர் காணிகளை வைத்திருக்கிறார்கள். ஒரு சிங்களவனுக்கு சுடுகாட்டுக்காக ஒரு அங்குல காணி கூட எடுப்பது கஷ்டம்" இவ்வாறு சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திலக் கருணாரட்ணா கூறியதாக சண்டே ஒப்சேவர் தெரிவித்துள்ளது.

"கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சம் தமிழர்களுக்கு தோட்டத்தைச் சுற்றவர உள்ள தரிசு நிலங்களை விநியோகிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. தொண்டமானுடைய அதிகாரம் அழிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்யாவிடில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் சில வருடங்களில் இந்த நாட்டில் வாழ முடியாத நிலை ஏற்படும். இந்த நாட்டின் சரித்திரத்தில் முதல் முறையாகத் தொண்டமான் மலைநாட்டில் ஒரு தமிழ் ராஜ்யத்தை உருவாக்க முயலுகிறார்" என மேலும் கூறியதாகத் தெரிய வருகிறது.

## எதிர்க்கட்சிக் குழுவினர் கடற் கொந்தளிப்பில் சிக்கினர்

கடந்த வெள்ளியன்று மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சிக் குழுவினர் கடற்கொந்தளிப்பில் அகப்பட்டதாக செய்தியொன்று தெரிவிக்கிறது.

கற்பிட்டியிலிருந்து மன்னாருக்கு இவர்களை ஏற்றிச் சென்ற படகு கடற்கொந்தளிப்பில் சிக்கி கடலில் மூழ்கும் நிலை ஏற்பட்டதாகவும் அக்கடலில் நின்ற கப்பல் ஒன்று இவர்களை மீட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## நானாவிதத் தொழில்களில் ஈடுபடுவோருக்கும் காப்புறுதி

நானாவிதத் தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கென சமூகநல காப்புறுதித் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

விவசாயிகளுக்காகவும், கடற்றொழிலாளர்களுக்காகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டங்கள் போலவே மற்றைய துறைகளிலுள்ளோருக்கும் சமூகநல காப்புறுதித் திட்டமொன்றை வகுத்துக் கொள்வதே இதன் நோக்கமாகும்.

மேசன் தொழில், தச்சுத் தொழில், உலோக ஓட்டு வேலை, வனைதல் தொழில், புடவை நெசவு, மின்சாரத் தொழில் முதலியவற்றில் ஈடுபட்டுள்ளோருக்கும் கலைஞர்களுக்குமென இந்த உத்தேச காப்புறுதித் திட்டம் வகுக்கப்படவுள்ளது.

இவர்களுக்கு மருத்துவத் தேவைகளுக்காக இழப்பீட்டு வசதி வழங்குதல், அங்கவீனமடையும் பட்சத்தில் இழப்பீடு வழங்குதல், ஓய்வூதியம் வழங்குதல் போன்ற பலவேறு வசதிகளையும் இத்திட்டம் அளிக்கும்.

# களுத்துறை தடுப்பு முகாமில் 400 தமிழ் இளைஞர்கள்!

களுத்துறையிலுள்ள தடுப்பு முகாமில் தற்பொழுது 400 தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவலொன்று தெரிவிக்கிறது.

இவர்களில் அநேகமானோர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். படையினரின் திடீர் சுற்றி வளைப்புகளின் போது தத்தமது வீடுகளிலிருந்து கூட்டிச் செல்லப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மனித உரிமைகள் செயலணிக் குழு மட்டக்களப்பு, மாத்தறை, கண்டி ஆகிய இடங்களில் குழுவின் கிளை அலுவலகங்களைத் திறக்கவுள்ளதாக அதன் தலைவரான ஓய்வு பெற்ற நீதியரசர் ஜே. எம். சூசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு அலுவலகம் ஜூலை 3 ஆம் திகதி மட்டு நகர் கோவிந்தன் வீதி 16 ஆம் இலக்க இல்லத்தில் திறக்கப்படும். அதன் பொறுப்பாளராக சே. கிங்ஸிலி பாத்திலொமி இருப்பார். காணாமல் போனோர், தடுப்புக் காவலில் இம்சைப்படுத்தப்படுவோர் பற்றிய புகார்களை இவ் அலுவலகம் ஏற்றுக் கொள்ளுமென அறிவிக்கப்படுகிறது.

## ★ பாராளுமன்றத் தெரிவுக்குழு யூன் 29-ல் கூடி விவாதிக்கும் இரு முக்கிய விடயங்கள்

பாராளுமன்றத் தெரிவுக் குழு மீண்டும் இம்மாதம் 29 ஆம் திகதி மங்கள முனசிங்க தலைமையில் கூடவுள்ளது. இக்கூட்டத்தில் இரு முக்கிய ஆவணங்கள் சாராம்சமாகவே விவாதிக்கப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இதில் ஒன்று யூன் மாதம் 17 ஆம் திகதிக் கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகளுக்குக் கையளிக்கப்பட்ட நான்கு பக்கங்கள் கொண்ட பொதுக் கருத்துக்களை உள்ளடக்கிய அறிக்கையாகும்.

மற்றது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அமைச்சர் தொண்டமானாலும் மற்றும் ஏழு தமிழ் அரசியல் கட்சிகளினாலும் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனைகள் ஆகும்.

## யோக சிகிச்சை கருத்தரங்கு

மொழிவாதம் நோய் பற்றிய கருத்தரங்கும், அந்நோயைக் குணப்படுத்தும் யோக சிகிச்சை முறைகள் பற்றிய செய்முறைப் பயிற்சியும் அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தினரால் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடத்தப்படும்.

யோகாசனக் கலாநிதியும், அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தின் இயக்குநருமான சுவாமி ஸ்ரீசித்தானந்த யோகி அவர்களும், யோகாசன நிபுணர்களும் இக் கருத்தரங்கில் பங்கு பற்றிக் கருத்துரைகள் வழங்கியும், யோகாசன செய்முறைப்பயிற்சி செய்தும் காண்பிப்பார்கள்.

## சுவர் விழுந்து சேதம்

கடந்த சில நாள்களாக வீசும் கடும் காற்றினால் கோப்பாய் நாவலர் வித்தியாலய மேல்மாடிக் கட்டடத்தின் ஒரு பக்கச் சுவர் முற்றாக இடிந்து விழுந்துள்ளது.

சனிக்கிழமை விடுமுறை நாளாகையால் தெய்வாதீனமாக உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை. (35)

## இறுதி ஆட்ட முடிவுகள்

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்டு வந்த, 61 கழகங்கள் பங்கு பற்றிய உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற பொழுது, பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து மோதிய குருநகர் பாடுமீன் அணியை இரண்டிற்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் கடும் போட்டியின் பின் தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை தட்டிக் கொண்டது.

இறுதிப் போட்டிக்கு முதல் இடம்பெற்ற கண்காட்சி ஆட்டத்தில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் அணியை எதிர்த்து யா. மா. வி. அ. குழு மோதியது. இரு அணிகளும் தலா 2 கோல்களைப் போட்டதினால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. (16)

## இராட்சத கடல் உயிரினம் திருமலையில் கரை ஒதுங்கியது

நாற்பது அடி நீளமான இராட்சத கடல் உயிரினம் ஒன்று கடந்த வெள்ளி காலை திருமலை மட்கோ இறங்குதுறை ஓரமாக உயிருடன் கரையொதுங்கி மக்களை வியப்பில் ஆழ்த்தியது.

மீன்பிடி அமைச்சு அதிகாரிகள் மீனின் உருவத்தை ஒத்திருந்த இந்த உயிரினத்தை இழுவைக் கப்பல் மூலம் இழுத்துச் சென்று நடுக்கடலில் விட்டபோதிலும் அது மீண்டும் கரைக்கு வந்து சேர்ந்தது.

"ஓங்கில்" எனப்படும் கடல்வாழ் விலங்கினமே இதுவெனக் கருதப்படுகிறது. நடுக்கடலில் கப்பலினால் தாக்கப்பட்டு அல்லது தற்போது வீசும் காற்றுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் இது கரை ஒதுங்கியிருக்கலாமெனக் கருதப்படுகிறது.

## வெளிநாட்டவரை அமெரிக்கா கடத்தலாம் எனத் தீர்ப்பு

அமெரிக்க உயர் நீதிமன்றம் கடந்த வாரம் வழங்கிய ஆறுக்கு மூன்று என்ற பெரும்பான்மை தீர்ப்பொன்றில் அமெரிக்க அரசு வெளிநாடுகளிலுள்ளவர்களை கடத்தி வந்து நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தலாம் என்ற ஆபத்தான தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது.

மெக்சிக்கோவில் உள்ள வைத்தியர் ஒருவரை போதை வஸ்து தடுப்பு அதிகாரி ஒருவரின் கொலை தொடர்பாக கடத்தியது சம்பந்தமாகவே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மெக்சிக்கோவும் கனடாவும் இந்த முரட்டுத்தனமான தீர்ப்புப் பற்றி தமது அச்சத்தை ஏற்கெனவே வெளியிட்டுள்ளன.

## தமிழ்க்குழுத் தலைவர் மீது ஒவ்வாமை

சென்ற வாரம் கொழும்புத் தமிழ்க் குழுக்கள் அரசுத் தலைவரை அவரது செயலகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது மிகவும் பிரபல்யம் வாய்ந்த முன்னாள் தமிழ் அரசியல்வாதியின் பிரபல்யம் வாய்ந்த மகன் அரசுத் தலைவருக்கு அண்மித்ததாக மேசையில் அமரப் போனாராம்.

அங்கு கடமையாற்றிய பாதுகாப்பு சிங்கங்கள் மரியாதையாகவும் திடமாகவும் மேசையின் அடிப்புறத்துக்கே கூட்டிச் சென்று அமரவைத்தனராம்.

இதில் என்ன ஒவ்வாமை? நிறமா அல்லது கொள்கையா என்பது எவருக்கும் புரியவில்லையாம்.

பேச்சுவார்த்தைக்குப் பின் அது ஒரு பெருங்கேலி என இவர் கூற அது அவரது அனுபவம் என அவர்கள் கூறியதெல்லாவற்றிற்கும் இதுவும் ஒரு காரணமாகவும் இருக்கலாம்.

## தொழிற்சங்க உரிமை நசுக்கம்

### ஐ. எல். ஓ வுக்கு புகார்

தேசிய பாதுகாப்பு என்ற போர்வையில் தொழிற்சங்கங்களுக்கு எதிரான சட்டங்களை ஸ்ரீலங்கா அரசு உருவாக்கி வருவதாக இலங்கைத் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் சர்வதேச தொழில் அமைப்பு (ஐ. எல். ஒ)வுக்கு புகார் செய்துள்ளது.

ஐ. எல். ஒ செயலாளர் நாயகத்திற்கு எழுதிய கடிதமொன்றில் 1989 லிருந்து எல்லா அரசாங்க சேவைகளையும் எழுபத்தைந்து வீதமான தொழில் நிறுவனங்களையும் விவசாய முயற்சிகளையும் அத்தியாவசிய சேவைகள் என்று அவசரகால விதிகளின் கீழ் ஸ்ரீலங்கா அரசு பிரகடனப்படுத்தியுள்ளதாக சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மஹரகமையிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றின் ஐநூறு தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்பட்ட விடயத்தை மிக அண்மையில் நடந்த ஒரு உதாரணமாக சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

---

## காடு அழிந்தால் மழை அருகும்

# அன்னையர் போராட்டம் இன்று முகத்துவாரத்தில்

ஜனாதிபதி பிரேமதாஸவின் பிறந்த தினமான இன்று கொழும்பு முகத்துவாரத்தில் உள்ள காளி கோயிலில் அன்னையரின் பெரும் ஆர்ப்பாட்ட நடவடிக்கை ஒன்று ஏற்பாடாகியிருந்தது.

காணாமற்போனவர்களின் அன்னையர், மனைவிமார்கள் இதில் பெருமளவில் கலந்து கொள்வார்கள் என இதன் ஏற்பாட்டாளரான சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த மஹிந்த ராஜபக்ஸ நம்பிக்கை வெளியிட்டார்.

இதனிடையே அன்னையரின் இந்த போராட்ட முன்னெடுப்பையடுத்து முகத்துவாரத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரசின் இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் போராட்டத்தில் பங்குபற்ற எண்ணுபவர்களை மிரட்டலே என எதிர்க்கட்சி எம். பி. ஒருவர் குற்றஞ்சாட்டினார்.

# அத்துலத்முதலி ஜ ஐ.தே.மு. ஜனாதிபதி வேட்பாளர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் சம்பந்தமாக ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி ஆலோசனை நடத்திவருகிறது.

அக்கட்சி வட்டாரங்களின் தகவல்களின் படி லலித் அத்துலத்முதலியை ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளராக நிறுத்துவதற்கான எண்ணம் உருவாகியுள்ளது.

இதே நேரம் காமினி திசாநாயக்கவை கட்சித்தலைவராகவும் தேர்தல் பிரசார அமைப்பாளராகவும் நியமிக்கவும் உத்தேசிக்கப்படுகிறது எனத் தெரியவருகிறது.

திருமதி பண்டாரநாயக போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டு அனுரா பண்டாரநாயக பொது வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டால், ஜனநாயக ஐக்கிய முன்னணி தனது வேட்பாளரை நிறுத்தலாம் என்ற கருத்துக்கமையவே அக்கட்சி அத்துலத்முதலியை தெரிவு செய்யவுள்ளதாக அறியப்படுகிறது.

# வறுமைக்கோட்டில் உள்ள குடும்பங்களுக்கு வீடுதிருத்த நிதி

வன்செயல்களினால் சேதமடைந்த வீடுகளை மீள அமைப்பதற்கும், திருத்தி அமைப்பதற்கும் புனர்வாழ்வு அமைச்சு 15 000 ரூபாவினை வறுமைக்கோட்டிலுள்ள குடும்பங்களுக்கு வழங்கவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கைகளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டு வருகிறது.

யாழ் மாவட்டத்தில் வன்செயல்களினால் முன்னர் சேதமடைந்த திருத்தியமைக்கப்பட்டு நன்கொடை வழங்கப்படாதவர்களில் வறுமைக்கோட்டிலுள்ள குடும்பங்களுக்கு முன்னுரிமைப் பிரகாரம் நன்கொடை வழங்குவதற்கும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. (18)

# இலங்கைக்குள்ளேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு

வெளிநாட்டு உதவியெதுவுமின்றியே இனப்பிரச்சினைக்கு இலங்கைக்குள்ளேயே தீர்வு காண தமிழ்க்கட்சிகள் முயற்சிப்பது அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மிகவும் சாதகமான முன்னேற்றமாகுமென அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

# மாகாண நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கமுதலமைச்சர்சபை

இனப்பிரச்சினைக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவினால் சென்ற மாதம் பதினேழாம் திகதி அதன் உறுப்பினர்களுக்கு வழங்கிய நான்குபக்க ஆலோசனைகளில் மாகாணங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவென ஒரு தேசிய சபையை (National Chamber) உருவாக்குவதற்கான ஆலோசனை ஒன்றும் உள்ளதாம்.

இச்சபை ஜனாதிபதி மற்றும் அமைச்சர்களுடன் அடிக்கடி தொடர்புகொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கை இணைக்காமல் தனித்தனி மாகாண சபைகளுக்கான எண்ணத்தை இந்த ஆலோசனைகள் உள்ளடக்கியுள்ளதால் தமிழ்த்தரப்பினர் இதை ஏகமனதாக நிராகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## கருத்தொற்றுமை...

மக்களால் ஏற்கப்படமாட்டாது என கலாநிதி விமல் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதன்படி பாராளுமன்ற தெரிவுக்குழு இணைப்புக்கு சாதகமான கருத்தொற்றுமையை ஏற்படுத்துமானால் ஐ. தே. க. அதை எதிர்க்காது எனத் தெரிகிறது. ஆனால் ஐ. தே. க. உறுப்பினர்கள் பெரும்பான்மையாக உள்ள தெரிவுக்குழுவில் ஐ. தே. க. வின் முன்முயற்சி அல்லது ஆதரவு இன்றி கருத்தொற்றுமை எப்படி ஏற்படும் என கேள்வி எழுப்பப்படுகின்றது. எவ்வாறாயினும் அரசின் நிலையை தமிழ்க்குழுக்களால் புரிந்து கொள்ள இச்சந்திப்பு உதவியுள்ளது.

## தமிழ்க்...

பொன்னம்பலம் கூறியபோதும் அவரது சகாக்களின் வற்புறுத்தலின் பேரிலேயே அவர் இச்சந்திப்பில் கலந்து கொண்டாராம்.

சந்திப்புக்காக ஜனாதிபதி செயலகத்திற்கு சென்ற குமார் பொன்னம்பலம் அவரைச் சங்கடப்படுத்தும் அளவுக்கு மிகவும் கடுமையான பாதுகாப்பு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டாரெனவும் தெரியவருகிறது.

# 1971 ஜே. வி. பி. பின்னணியில் சோவியத்யூனியன் -ஸ்ரான்லி ஜயவீர

1971இல் இடம்பெற்ற ஜே. வி. பி. கிளர்ச்சியின் பின்னணியில் சோவியத் யூனியன் இருந்ததாகவும், அதன் திட்டங்களை நிறைவேற்றும் பாணியில் வடகொரியா செயற்பட்டதாகவும் 1971-ல் சோவியத் யூனியனிலுள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்தில் முதல் செயலாளராக இருந்த ஸ்ரான்லி ஜயவீர கூறியுள்ளார்.

அண்மையில் அவர் எழுதிய கட்டுரையில் இவ்வாறு தெரிவித்திருக்கும் அவர் திருமதி பண்டாரநாயகாவை கவிழ்க்க சோவியத் யூனியன் தான் விரும்பியது எனத் தெரிவித்துள்ளார்.

ஒரு சில அரசியல் கட்சிகளைத்தவிர ஏனைய கட்சிகள் ஏதாவது ஒரு வகையில் வெளிநாட்டு உதவியைப் பெறுகின்றன என்று கூறும் ஜயவீரா 1971 இலும் 1981 லும் இவைபற்றித் தெரிந்தபோது நடவடிக்கை எதுவும் எடுக்காத அரசாங்கம் இப்போது மட்டும் ஜே. வி. பி தலையீடுபற்றி விசாரணை நடத்த விரும்புவது ஏன் என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

## ஷெல் தாக்குதல்

நேற்றுக்காலை 9-30 மணியளவில் காரைநகர் இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் மக்கள் வாழும் குடியிருப்பு பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்தும் இராணுவத்தினர் யாழ் கரையோர பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. 47

## பாடசாலைகள் இடமாற்றம்

அண்மையில் இளவாலைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களையடுத்து இடமாற்றம் செய்யப்பட்டிருந்த பாடசாலைகள்சில இடநெருக்கடி காரணமாக வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம் சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் என்பன அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் நாளை புதன் பகல் 1 மணி முதல் இயங்கவுள்ளன. பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம் அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தில் இயங்கவுள்ளது. 22 26

## புலிகளின்...

புடையவர்கள் அல்லவென்பதே யதார்த்த நிலை.

எனவே விடுதலைப்புலிகள் ஏற்கக்கூடிய ஒரு தீர்வினைக் கண்டறிய வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மோதிலால் நேரு ஜனாதிபதி பிரேமதாசாவை தனியாகச் சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது.

## இராணுவத்திற்கான...

புதிதாக நியமிக்கப்பட்ட சிப்பாய்களுக்கு 3மாத பயிற்சியளிக்கப்படுகிறது இவர்களுக்கான ஆயுதங்களும் மேலதிக செலவு செய்யாது மரணமான மற்றும் படையைவிட்டு ஓடியவர்களின் ஆயுதங்களே வழங்கப்படுகிறது.

நீண்டகாலத்துக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு ஓய்வுவழங்குவதற்காக சுற்றுமுறை மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

ஒரு நடவடிக்கை முடிந்ததும் இன்னுமொரு நடவடிக்கைக்கு மாற்றம்செய்யப்படுவதால் இராணுவத்தினர்க்கு ஓய்வு இடைப்பதில்லை இதனால் பலர் தற்கொலை செய்துள்ளனர் இன்னும் பலர் தமக்குத் தாமே காயம் ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்றும் இராணுவத்தரப்பு செய்திகள் கூறுகின்றன.

இவ்விடங்களை நிரப்பும் இந்த நடவடிக்கை கடற்படை மற்றும் விமானப்படையினருடன் இணைந்து தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும் எனவும் இராணுவத் தரப்பினர் தெரிவித்தனர் என ஐலண்ட் மேலும் குறிப்பிட்டது.

# தம்புள்ளை ஹோட்டல் திட்டம் எதிர்ப்பு வலுவடைகிறது

தம்புள்ள கற்குகை அருகில் அமைக்கப்பட்டிருக்கும் ஹோட்டல் திட்டத்திற்கு எதிர்ப்பு வலுவடைந்து வருகிறது.

சுதந்திரக்கட்சி, சிங்களவர் பாதுகாப்பு அமைப்பு, பௌத்த தபிக்குகள் அமைப்புக்கள் என பல்வேறு கோணங்களிலுமிருந்து மத ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் இத்திட்டத்தை எதிர்க்கின்றனர்.

தென்னிலங்கையின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாக இது உருவெடுத்துள்ளது.

# இந்திய சட்ட நிபுணர்களுக்கு விசா மறுக்கப்படும்

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக இந்திய சட்டத்துறை நிபுணர்கள் சிறிலங்காவுக்கு வருவதற்கான விசா வழங்கப்படமாட்டாது என நம்பகமாகத் தெரியவருகிறது.

இந்திய நிபுணர்கள் சிறிலங்காவின் நாட்டு சட்டத்தை சட்ட ஏற்பாடுகளை ஆராய விரும்பினால் உயர் ஸ்தானிகராலயத்தின் மூலம் அவை அனுப்பிவைக்கப்படலாம் என சிறிலங்கா சட்டத்துறை அதிகாரிகள் கருதுகின்றனர்.

மேலதிக தகவல் பெற இந்திய அதிகாரிகள் சிறிலங்கா வர விசா வழங்கப்படும் என ஜனாதிபதி ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் அண்மையில் கூறியபோதும் அப்படி வழங்கப்படாதென தெரிகிறது.

# ● இந்திய ஜனாதிபதி தேர்தல் சுவேலலை பி.ஜே.பி. ஆதரிக்கும் 21பேர் வேட்புமனு தாக்கல்

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் லோக்சபா உப-சபாநாயகர் ஜீ ஜீ. சுவேலலை ஆதரிப்பதென நேற்று நடைபெற்ற பாரதிய ஜனதாகட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய முன்னணி ஏற்கெனவே பேராசிரியர் சுவேலவின் பெயரைப் பிரேரித்துள்ளது இது தொடர்பாக இடதுசாரி முன்னணியுடன் அது நேற்றும் பேச்சுவார்த்தை நடாத்தியது இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் இறுதி முடிவெடுக்கப்படும்.

இதுவரை இருபத்தியொருபேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். வேட்பு மனுத்தாக்கல்செய்யக் கடைசிநாள இருபத்தி நாலாம் திகதியாகும்.

இதற்கிடையில் ராஜ்ய சபா செயலாளர் அகர்வால இம் மாத முடிவில் ஓய்வு பெறுவதால் புதிய தேர்தல் அதிகாரி ஒருவரை தேர்தல் ஆணைக்குழு நியமிக்க வேண்டுமென ஜனதா தள செயலாளர் கோரியுள்ளார்.

# தேசிய சேமிப்பு வங்கிக்கு அமைய ஊழியர் தெரியப்படுவர்

தேசிய சேமிப்பு வங்கியின் வடபகுதிக் கிளைகளுக்கு ஏற்பட்டுள்ள ஊழியர் தட்டுப்பாட்டுப் பிரச்சினையைக் குறைப்பதற்காக வடபகுதியின் சகல கிளை முகாமையாளர்களின் முறையீட்டையும் தலைமைக் காரியாலயம் செவிமடுத்து யாழ்ப்பாண அரச அதிபர் மூலம் தற்காலிகமாக ஊழியர்களைவேலைக்கு அமர்த்துவதற்கு அனுமதியளித்துள்ளது.

அண்மையில் கொழும்பு சென்ற யாழ்ப்பாணத் தேசிய சேமிப்பு வங்கிக்கிளை முகாமையாளரும் பருத்தித்துறைக் கிளை முகாமையாளரும் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பலனாக இதற்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. 20

## அவ்ரோ நோட்டம்

நேற்று பிற்பகல் 2 45மணியிலிருந்து 3 30 மணிவரை கொடிகாமம், எரணி, மிருசுவில், சாவகச்சேரி மட்டுவில் பகுதிகளை அவ்ரோ விமான மொன்றுவட்டமிட்டுப்பறந்து சென்றது. 25

## பல் கட்டும் பிரிவு

யாழ் வைத்தியசாலையில் உள்ள பற்சிகிச்சைப்பகுதியில் முதன் முதலாக பற்களை இழந்தவர்களுக்கு பற்களைக் கட்டும் பிரிவு ஒன்று அடுத்த மாதமளவில் இயங்கவுள்ளது.

## சித்தாண்டி ஹெலிதாக்கு

மட்டக்களப்பு சித்தாண்டியில் தொடர்ந்து படையினர் ஹெலிகப்டர் மூலம் தாக்குதல் நடத்திவருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

## வீரச்சாவு

மட்டக்களப்பு உன்னிச்சையில் நேற்று முன்தினம் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் 2ம் லெப். மிருணன் (ந. தவசெல்வன்) 2ம் லெப் துசிலன் (செ. ரகுநந்தன் ஆகிய இரு போராளிகள் வீரச்சாவு எய்தினர்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லக்ஷ்மி கட்டிடத்திலுள்ள அச்சகத்தில் 23-06-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது